வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பள்ளி மாணவர்கள் மற்றும் மலைவாழ் விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை பற்றிய விழிப்புணர்வு**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் வளாகத்திலுள்ள புதிய பாரதி பள்ளிக் குழந்தைகளுக்கு அங்கக வேளாண்மை பற்றிய விழிப்புணர்வு முகாம் நேற்று (18.11.2015) நடைப்பெற்றது. இளம் வயதினிலே இயற்கை வழி வேளாண்மையில் நஞ்சில்லாத உணவு உற்பத்தி பற்றிய தொழில் நுட்பங்களான மண்புழு உரம் தயாரிப்பு , பண்ணைக் கழிவு மக்கிய உரம் தயாரிப்பு, பூச்சி விரட்டி, பஞ்சகவ்யா, அங்கக பண்ணையம், மாடித் தோட்டம், மற்றும் மரம் வளர்ப்பு ஆகியன எளிய முறையில் செயல் விளக்கங்களுடன் வளங்குன்றா அங்கக வேளாண்மை சார்ந்த விஞ்ஞானிகளால் கற்பிக்கப்பட்டது. பள்ளி மாணவர்களின் சந்தேகங்களுக்கு உரிய முறையில் பதில்கள் அளிக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு முகாமில் ஆசிரியர்கள் உட்பட சுமார் 100 பள்ளி மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

அங்கக பண்ணைய மலைவாழ் மக்கள் நல பிணைய திட்டத்தின் கீழ் கோவை தொண்டாமுத்தூர் தாலுகா, சிறுவாணி பகுதியின் சாடிவயல் மற்றும் சீங்கப்பதி கிராமத்தைச் சேர்ந்த 25 மலைவாழ் விவசாயிகளுக்கு இரண்டு நாட்கள் அக்டோபர் 28 மற்றும் 29ம் தேதிகளில் அங்கக வேளாண்மை பற்றிய பயிற்சி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் அங்கக வேளாண்மைத் துறையால் நடத்தப்பட்டது. மக்கள் பங்கேற்பு திட்டத்தின் கீழ் இவ்விரு கிராமங்களுக்குச் சென்று அங்கக வேளாண்மையில் அவர்களின் தேவைகள் உரையாடல் மூலம் அறியப்பட்டது.

முதல் நாள் நிகழ்ச்சியாக வளங்குன்றா அங்கக வேளாண்மைத் துறையின் தலைவர் முனைவர்.ஏ.சோமசுந்தரம் அவர்கள் அங்கக வேளாண் பண்ணையத்தில் ஊட்டச்சத்து மற்றும் களை மேலாண்மைப் பற்றி விரிவாக விளக்கினார்.அதனைத் தொடர்ந்து, உயிர் உரங்களைக் கொண்டு விதை நேர்த்தி செய்தல் பற்றி முனைவர்.ஆர்.சுபாஷினி, உதவிப் பேராசிரியர் (நுண்ணுயிர்கள் துறை) செயல் விளக்கமளித்தார். முனைவர்.அ.பரணி, உதவிப் பேராசிரியர்(சுற்றுச்சூழல் துறை) அங்கக வேளாண்மையில் உயிர் உரங்கள் தயாரிப்பதுப் பற்றியும் மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் பஞ்சகவ்யா தயாரிக்கும் முறைகளைப் பற்றியும் விரிவான செயல் விளக்கத்துடன் எடுத்துரைத்தார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். க. கணேசன், அங்கக வேளாண்மையில் பூச்சித் தாக்குதல் ஏற்படின் அதை கட்டுப்படுத்தும் முறைகளை எளிதாக பயிற்சியாளர்களுக்கு விளக்கினார் மற்றும் பூச்சி விரட்டி தயாரிக்கும் முறைகளைப் பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

பயிற்சியின் இரண்டாவது நாளில், அங்கக சான்றளிப்பு பெறுவதன் அவசியத்தையும் மற்றும் பயன்களையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கத் துறை பேராசிரியர் முனைவர். ர. ஜான்சி ராணி அவர்கள் விளக்கமளித்தார்.

சந்தையில் கிடைக்கக் கூடிய அங்கக இடுபொருட்களின் பொருட்காட்சியும் இப்பயிற்சியில் இடம் பெற்றது. பயிற்சியின் முடிவில், மலைவாழ் விவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்களான உயிர் உரங்கள், சூடோமோனஸ், டிரைக்கோடெர்மா, பயோமினரலைசர்,அசோபாஸ் மற்றும் மண்புழு உரம் தயாரிப்புக்கான சில்பாலின் பைகளும் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி மூலம் 25 மலைவாழ் குடும்பத்தினர் மற்றும் அவ்விரு கிராம மலைவாழ் விவசாயிகளும் அங்கக வேளாண்மையின் மகத்துவத்தை நன்கு அறிந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்